செய்தி வெளியீடு எண் : 1575 நாள் : 12.09.2022

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், தேசிய தர உறுதி நிர்ணய திட்ட (NQAS) விருது, கர்ப்பிணிகளுக்கான மகப்பேறு அறை மற்றும் அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட (LaQshya) சான்றிதழ்களை வழங்கினார்.**

இன்று (12.09.2022) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில், தேசிய தர உறுதி நிர்ணய திட்ட (NQAS) விருது மற்றும் கர்ப்பிணிகளுக்கான மகப்பேறு அறை, அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட (LaQshya) சான்றிதழ் வழங்கும் விழா மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நாடு முழுவதும் 12 செப்டம்பர் 2022 முதல் 17 செப்டம்பர் 2022 வரை "நோயாளி பாதுகாப்பு விழிப்புணர்வு" வாரமாக அனுசரிக்கப்படுகிறது. நோயாளிகளின் பாதுகாப்பு என்பது தேசியத் தர உறுதி நிர்ணயத் திட்டம் (NQAS) மற்றும் மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் (LaQshya) திட்டங்களின் அடிப்படை அம்சமாக உள்ளது.

நம் மாநிலத்திலுள்ள கிராமம் மற்றும் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் சுகாதார சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, தேசியத் தர உறுதி நிர்ணய திட்டம் (NQAS) 2015ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கர்ப்பிணிகளுக்கான மகப்பேறு அறை மற்றும் அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்டம் (LaQshya) 2018ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் குழந்தை பேற்றின் போது அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகளின் தரத்தை மேம்படுத்துவதையும், மரியாதைக்குரிய மகப்பேறு பராமரிப்பை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒன்றிய அரசு, 2018–19 முதல் 2020–21 வரையிலான மூன்று வருடங்களில் தமிழகத்தில் தேசியத் தர உறுதி நிர்ணயத் திட்டம் (NQAS) செயல்படுத்துவதில் சமுதாய சுகாதார மையங்கள் (CHC) பிரிவில் முதல்நிலை (Winner) பரிசும், மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகள் பிரிவில் தேசிய அளவில் இரண்டாம் நிலை (Runner–up) பரிசும் தமிழகத்திற்கு வழங்கியுள்ளது, இச்சாதனையை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இன்று (12.09.2022) அறிவித்து, மாநில தர உறுதி குழுவினரை பாராட்டி வெற்றிக் கோப்பையை பரிசளித்தார்கள்.

மேலும், தேசிய தர உறுதி நிர்ணயத் திட்டத்தின் (NQAS) கீழ் 127 அரசு மருத்துவ மையங்களுக்குத் தரச்சான்றிதழ் விருதுகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in